

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 24-09-2025

# ஓரணியில் திரண்ட தமிழ்நாடு!

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்று கட்டளையிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஓரணியில் திரண்டு விட்டது தமிழ்நாடு. அந்தக் காட்சிகளைத் தான் கடந்த 20, 21 ஆகிய நாட்களில் பார்த்தோம். இனம், மொழி, மானம் காக்க தமிழ்நாட்டை ஓரணியில் திரட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் மாநிலம் முழுவதும் உள்ள 68 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் ஒரு கோடிக்கும் அதிகமான குடும்பத்தினர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று அனைவரையும் உறுதிமொழி எடுக்க வைத்தார் தலைவர். இந்த உறுதிமொழியை நாட்டுக்கு உணர்த்தவே பொதுக் கூட்டங்கள் அறிவித்தார்.

நடைபெற்ற பொதுக்கூட்டங்கள் அனைத்துமே மண்டல மாநாடுகளைப் போல நடந்துள்ளது. மனிதக் கடலில்தான் கழக முன்னோடிகள் பேசி இருக்கிறார்கள். இளைஞர்களும், பெண்களும் குவிந்த பொதுக்கூட்டமாக இவை அமைந்துள்ளன. இந்தக் கூட்டத்துக்கு கொள்கை உரம் ஏற்றப்பட்டுள்ளது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாணி ஆகும். பணியாகும்.

*** தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்!**

*** வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் ‘SIR’க்கு எதிராக நிற்பேன்!**

*** ‘நீட்’ மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன்.**

*** நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன்.**

*** தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன்.**

*** ‘பெண்கள் விவசாயிகள் மீனவர்கள் நெசவாளர்கள் தொழிலாளர்கள்’ என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன்.**

- என்று உறுதி ஏற்றுள்ளார்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள். தமிழ்நாட்டு மக்கள்.

ஆளும் கட்சியாக ஆனபிறகும், போராட வேண்டிய நிலைமைக்குத்தான் நம்மை வைத்துள்ளது பா.ஜ.க. அரசு.

**இந்தியாவில் அனைத்துத் துறையிலும் முன்னேறிய மாநிலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசின் புள்ளிவிபரங்களின் படி தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 2021 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னால் தரப்பட்ட வாக்குறுதிகள் 505. அதில் 404 வாக்குறுதிகளை நான்கரை ஆண்டு காலத்தில் செயல்படுத்திக் காட்டி இருக்கிறார். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 11.19 விழுக்காடு என்ற அளவுக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் செய்து காட்ட முடியாத அளவுக்கு உயர்த்திக் காட்டி இருக்கிறார்.**

மாதம் தோறும் கலைஞர் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாயை ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் பெறுகிறார்கள். விடுபட்டவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கும் வழங்க இருக்கிறார்கள். போக்குவரத்துத் துறை நஷ்டத்தில் இயங்கும் சூழலில் மகளிருக்கு கட்டணமில்லா வசதி சாத்தியமில்லை என்று சொல்லப்பட்ட போதும் அதனை மீறி விடியல் பயணத்தை அறிவித்தவர் முதலமைச்சர் அவர்கள். தினமும் பசியோடு பள்ளிக்கு வரும் 21 லட்சம் குழந்தைகள் வயிறார உணவு சாப்பிட்டு விட்டு படிக்கிறார்கள்.

புதுமைப்பெண் - தமிழ்ப்புதல்வன் - நான் முதல்வன் ஆகிய திட்டங்கள் இளைய சமுதாயத்தை அறிவிலும் ஆற்றலிலும் கல்வியிலும் தனித்திறமையிலும் முன்னேறிய சமுதாயமாக மாற்றிக் கொண்டு இருக்கிறது. நான் முதல்வன் திட்டத்தில் இதுவரை 44 லட்சம் மாணவ, மாணவியருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி தரப்பட்டுள்ளது. கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 10 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. உலகத்தை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு காட்சி அளிக்கிறது.

இதனை எதிர்க்கட்சிகள் பழிக்கிறார்கள் என்றால் பரவாயில்லை. அது தான் அவர்களது தொழில். பழித்தால்தான் அவர்களால் பிழைக்க முடியும். ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கு எதிரான செயல்களையே தொடர்ந்து செய்கிறது. செய்து வருகிறது.

ஒன்றிய அரசின் மக்கள் விரோத, தமிழ்நாடு விரோதச் செயல்பாடுகள் அனைத்தையும் துணிச்சலாக நேருக்கு நேர் எதிர்க்கும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் இருக்கிறார். 2 ஆயிரம் கோடி பணம் வேண்டுமானால் மும்மொழித் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்ற போது, ஐந்தாயிரம், பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் ஏற்க முடியாது என்று சொன்னவர் தமிழ்நாட்டு முதலமைச்சர். ஒன்றிய அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்துக்கும் எதிராக ஒரு மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் அது தமிழ்நாடு சட்டமன்றத்தில்தான். அரசியல் ரீதியாக மட்டுமல்ல, பா.ஜ.க.வின் கொள்கையும், திராவிட இயக்கத்தின் கொள்கையும் நேருக்கு நேர் எதிரானது, இப்போது நடக்கும் யுத்தம் என்பது இரண்டு தத்துவங்களுக்கு எதிரான யுத்தம் என்று சொன்னவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். அதனால்தான் திட்டமிட்டு தமிழ்நாட்டை பழிவாங்கி வருகிறது பா.ஜ.க.

**பா.ஜ.க.வின் இந்த பாசிச எண்ணங்களை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுதிமொழியும், பொதுக்கூட்டங்களும் சிறப்பான பங்களிப்பைச் செலுத்திவிட்டன.**

**2019 ஆம் ஆண்டு முதல் எதிர்கொண்ட தேர்தல் அனைத்திலும் வெற்றி பெற்று வருகிறார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சாதாரண வெற்றி அல்ல, மகத்தான வெற்றியைப் பெற்று வருகிறார். எதிரிகளைக் கலங்கடிக்கும் வெற்றியைப் பெற்று வருகிறார். 2026ஆம் ஆண்டு நடைபெறப் போகும் தேர்தலிலும் அத்தகைய வெற்றியைத் தான் பெறப் போகிறார் முதலமைச்சர் என்பதை ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுதிமொழி ஏற்பு பொதுக்கூட்டங்கள் உணர்த்துகின்றன.**

**தலைநிமிர்ந்த தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம்!**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.9.2025) விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், எஸ்.தங்கபாண்டியன், ஜி.அசோகன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு.ச.உமா, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, காவல் கண்காணிப்பாளர் தெ.கண்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில் – ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்புக் கூட்டம்!

# தமிழர்களின் மொழி, பண்பாட்டைக் காக்கும் இரும்பு மனிதர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் எ.வ.வேலு பேச்சு! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

**திருவண்ணாமலை, செப்.24 -**

**சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனங்களின் மொழி, பண்பாட்டை காத்த இரும்பு மனிதர் ஜோசப் ஸ்டாலின், தமிழர்களின் மண், மொழி, மானத்தை காக்கும் இரும்பு மனிதர் முதல்வர் மு.க. ஸ்டாலின் என்று, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், ‘தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன்’, ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானயேற்பு, மாபெரும் பொதுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**

இதில் கழக கொள்கைப் பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை மாநகரம், திருவள்ளுவர் சிலை அருகில், 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மானமேற்பு, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு, கழக கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் எ.வ.வேலு ஆற்றிய உரை வருமாறு:-

ஒரு மனிதன் பண்பட கல்வி அவசியம், தமிழ்நாட்டில் அரசு சார்ந்து 22 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் 18 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் இல்லை. துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமலிருப்பதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் பா.ஜ.க.வின் ஏஜெண்டான தமிழ்நாட்டு ஆளுநர் ரவி தான் காரணம். இப்படியிருந்தால் கல்வித்தரத்தை எப்படி உயர்த்தமுடியும். தமிழ்நாட்டில் படிப்பவர்கள் மிகுந்த அறிவாளிகள். அமெரிக்க நாட்டையே ஆட்டிப்படைக்கும் கூகுல் சுந்தர் பிச்சை ஒரு தமிழர் தான். அறிவில் சிறந்த நாடு தமிழ்நாடு.

### வஞ்சிக்கும் மோடி அரசு!

வடஇந்தியாவில் புயல் வந்தால், ஓடோடிச் சென்று, நிதி வழங்கும் ஒன்றிய மோடி அரசு, தமிழ்நாட்டில் 100 திட்டம், வர்த்த, பெஞ்சால் புயல் உள்ளிட்ட எந்த புயல் பேரிடருக்கும் நிவாரணம் வழங்காமல் வஞ்சிக்கிறது ஒன்றிய மோடி அரசு.

பச்சைத் துண்டை போட்டுக் கொண்டிருப்பதால், பச்சைத் தமிழராகி விட்ட எடப்பாடி பழனிச்சாமி, தமிழ்நாட்டில் போகிற இடத்திலெல்லாம் தி.மு.க. அரசு கடன் வாங்கி வருவதாக குற்றஞ்சாட்டுகிறார். எடப்பாடி அதிமுக அரசின் பதவி காலம் முடிந்ததும், கழக அரசு பொறுப்பேற்ற போது, ரூபாய் 4 லட்சத்து 56ஆயிரத்து 660 கோடித் தொகையை கடன் இருந்தது. அதற்கு ஓராண்டிற்கு ரூபாய். 37ஆயிரத்து 581 கோடி ரூபாய் வட்டி என்றும், ஆக ஐந்தாண்டுகளில் ரூபாய். 1 லட்சத்து 87 ஆயிரத்து 95 ஆயிரம் கோடித் தொகைக்கு வட்டி மட்டும் வந்துள்ளது. அசல் மற்றும் வட்டி ஆகிய இரண்டையும் சேர்த்தால் அதிமுக எடப்பாடி அரசு வைத்துவிட்டு சென்ற கடனுக்கு இதுவரை ரூபாய் 6 லட்சத்து 44ஆயிரத்து 565 கோடித் தொகை வந்துள்ளது.

கழக அரசு பொறுப்பேற்றவுடன் நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் கடன் தள்ளுபடி, மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், மாணவர்களின் காலை உணவுத் திட்டம், ஆதரவற்ற குழந்தைகளின் அன்புக் கரங்கள் உள்ளிட்ட எண்ணற்றத் திட்டங்களுக்காக 5 ஆண்டுகளில் 2 லட்சத்து 85ஆயிரத்து 394 கோடி ரூபாய் மட்டுமே கடன் பெற்றுள்ளது திராவிட மாடல் அரசு. அதிமுக எடப்பாடி அரசுபோல், ஊதாரித்தனமாக செலவு செய்வதற்காக கடன் பெறவில்லை.

ஆனால், தமிழ்நாடு முழுவதும் பொய் பேசுவதற்காகவே சுற்றுப்பயணம் செய்யும் எடப்பாடி பழனிச்சாமி, மொத்தக்கடனையும், நமது கழகதான் அரசு தான் வாங்கியதாக மக்களிடம் நாளொரு பொழுது, பொழுதொரு வண்ணம் பொய் பேசி வருகிறார். எடப்பாடி அரசு வாங்கியக் கடதான், தற்போது தமிழ்நாட்டின் கடன் அளவை அதிகரிக்க வைத்திருக்கிறது.

மனிதாபிமான இதயம், தாயுள்ளம் இருப்பதால் தான், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அன்புக் கரங்கள் உள்ளிட்ட புதியப் புதிய திட்டங்களை மக்களுக்காக செய்து வருகிறார். இதற்காகத்தான் 5 ஆண்டுகளில் ஏழை, எளிய மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும், மாற்றுத்திறனாளிகளுக்காகவும் மட்டுமே திராவிட மாடல் அரசு 2 லட்சத்து 85 ஆயிரத்து 394 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது.





### எடப்பாடியின் பொய்ப் பிரச்சாரம்!

அ.தி.மு.க. எடப்பாடி ஆட்சிக்காலத்தில் 11 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக பச்சைப் பொய்யைச் சொல்லும் எடப்பாடி பழனிச்சாமி, அனுமதி கொடுத்தவர்களுடன் பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டார். ஆனால் அந்த 11 மருத்துவக் கல்லூரிக்காக தற்போது திராவிட மாடல் அரசு 2426 கோடி ரூபாய், அதாவது நமது அரசுதான் 74 சதவீதம் செலவு செய்திருக்கிறது.

வருவாய்த் துறை, பள்ளிக் கல்வித் துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைக்களுக்காக 5 ஆண்டுகளில் 33ஆயிரத்து, 417கோடி ரூபாய் கழக அரசு செலவு செய்திருக்கிறது. அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமி அரசு திட்டங்களை அறிவித்துவிட்டு சென்றுவிட்டார். அறிவித்ததையும் சேர்த்து கழக அரசுதான் செலவு செய்ததால்தான் கடன் அளவு உயர்ந்திருக்கிறது.

திராவிட மாடல் அரசை கடனாளியாக்கியது எடப்பாடிதான், ஆனால் மக்களை ஏமாற்றும் நோக்கில் இதுபோன்ற சுற்றுப்பயணத்தில் திமுக அரசுதான் கடன் வாங்கியது போல பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தைக் காத்திட, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மானயேற்பு பொதுக்கூட்டம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனங்களின் மொழி, பண்பாட்டை காத்தவர் இரும்பு மனிதர் ஜோசப் ஸ்டாலின், தமிழர்களின் மொழி,இனம், பண்பாட்டை காத்துவருபவர், தமிழ்நாட்டின் இரும்பு மனிதர் நமது முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்.

தி.மு.க., என்ற இயக்கம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், எந்த கொம்பனாலும் அசைத்து பார்க்கமுடியாது, இனியும் எவனும் பிறக்க முடியாது, நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் எல்லாம், எத்தனை வந்தாலும், எஃகுக் கோட்டையாம் திமுகவை அழிக்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

முன்னதாக, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழியை அமைச்சர் எ.வ.வேலு வாசிக்க, அனைவரும் உறுதி மொழியை ஏற்றுக் கொண்டனர்.

பின்னர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் ஓரணியில்தமிழ்நாடு பரப்புரையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு, கழக கொள்கைப் பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் சால்வை அணித்து, நினைவு பரிசுகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப. விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணைச் செயலாளர் க. சௌந்தரராசன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம். நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ. மெய்கண்டன், ஏ.ஏ. ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர். பிரவீன்ஸ்ரீதரன், சி.பி. பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ. அருண், எல்.ஐ.சி.து. வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் அ.சி வக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், மெய்யூர். ந.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், சி.மாரிமுத்து, ப.கேசவன், கோ. ரமேஷ், எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, து.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகர்,

பேரூர்ச் செயலாளர்கள் சி.கே.அன்பு, பா.முருகையன், எம்.சீனுவாசன், திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு. ராஜாங்கம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வ பாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார் மற்றும் மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளை, வட்டக் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் உட்பட பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ப.கார்த்தி வேல்மாறன் நன்றி கூறினார்.

முன்னதாக மாவட்ட தி.மு.க. கலைக்குழு மு.அம்பேத்கர் வழங்கும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில் நேற்று முன்தினம் (22.09.2025) பள்ளிக்கல்வித் துறையின் சார்பில், பள்ளி தலைமையாசிரியர்களுக்கான நடைபெற்ற மாநில அளவிலான அடைவுத்தேர்வு ஆய்வுக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையாசிரியர்களுடன் உரையாடினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் உள்ளார்.